**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**

# P102 உரைநடையும் நாடகமும்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தனித்தமிழ் இயக்கத்தை ஏற்படுத்தியவர் யார்?
2. அடிமை வாழ்வின் தன்மையை எடுத்துக்கூறும் கதை எது?
3. "மலைமேல் ஏற்றிய நந்தாமணி விளக்கு" என்று அடிகளார் உருவகப்படுத்துவது எதை?
4. பழைய உரையாசிரியர்களைப் போன்று திரு.வி.க. உரை எழுதிய நூல்கள் யாவை?
5. இரா.பி. சேதுப்பிள்ளைக்குச் சாகித்ய அகாதமி விருது பெற்றுத் தந்த நூலின் பெயர் யாது?
6. பாவாணர் இயக்குநராகப் பொறுப்பேற்ற ஆராய்ச்சி அமைப்பின் பெயர் யாது?
7. மு.வ. உரைநடையின் தனித்தன்மைகளை எத்தனை வகைப்படுத்தலாம்?
8. கோவி. மணிசேகரனின் உரைநடைக்கு ஊற்றுக் கண்ணாகத் திகழ்ந்தவர் யார்?
9. நான்முகன் தேவர்களுக்காக உருவாக்கிய நாடகத்தின் பெயர் என்ன?
10. பழந்தமிழ் நாடக வகைகள் யாவை?
11. பம்மல் சம்பந்த முதலியார் நிறுவிய நாடக சபையின் பெயர் என்ன?
12. நாடகங்களின் இரண்டு வகையான முடிவுகள் யாவை?

13. தெருக்கூத்துடன் நெருங்கிய தொடர்புடைய அம்மன் யார்?
14. மருது சகோதரர்கள் பற்றிய கவிதை நாடகம் எது?
15. வானொலி நாடக நிகழ்ச்சிகளின் குறிக்கோள்கள் எவை?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. நாடக உரைநடை எவ்வாறு அமைந்திருக்கும்?
2. திரு.வி.க. தம் தமிழ் நடை பற்றிக் கூறியது என்ன?
3. பாவாணரின் தனித்தமிழ் நடைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
4. கண்ணதாசனின் தமிழ்நாட்டுப் பற்றுக்கு ஒரு சான்று தருக.
5. மனோன்மணீய நாடகத்தில் மனோன்மணியை ஆசிரியர் எவ்வாறு அறிமுகம் செய்துள்ளார்?
6. சம்பந்த முதலியார் எழுதிய நாடகங்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்? அவை யாவை?
7. கவியின் கனவு நாடகத்தை மக்கள் மிகவும் ரசித்தமைக்கான சான்றுகள் எவை?
8. வரலாற்று நாடகங்களின் உரையாடல் தன்மைகள் எவை?

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதியின் பங்களிப்பைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) சேதுப்பிள்ளையின் படைப்புகளும் பாராட்டுகளும் குறித்து கட்டுரை வரைக.

2. (அ) தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கட்டுரை தருக.

(அல்லது)

(ஆ) சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள் குறித்து விளக்கி எழுதுக.

3. (அ) நாடக முன்னோடிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வானொலி நாடகத்தின் தன்மை குறித்து எழுதுக.

* * *